20.09.2021

அசல் வழக்கு எண்: 557/2013

பி.வா.சா.3 சாட்சி சேகர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

ஆரம்பித்த நேரம்– 12.32 P.M.

எனக்கு வந்த சம்மனில் குறிப்பிட்டுள்ள இரண்டு ஆவணங்களையும் கொண்டு வந்துள்ளேன். இரண்டு ஆவணங்களுக்கும் உண்மை நகல்கள் கொண்டு வந்துள்ளேன். கடந்த 14.09.2009 ம் தேதியில் திரு.V.P. திருமகன் என்பவருக்கு, காயத்திரி தேவி எழுதிக்கொடுத்த புஞ்சை பதிவு செய்த கிரையப்பத்திரத்தின் உண்மை நகல் X3 ஆகும். 20.08.2009 ம் தேதி M பரமேஸ்வரிக்கு, காயத்திரி தேவி எழுதிக்கொடுத்த புஞ்சை நில பதிவு செய்த கிரையப்பத்திரத்தின் உண்மை நகல் X4 ஆகும்.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

08.09.2021 ம் தேதி நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்வதற்கு எங்கள் சார்பதிவாளருக்கு அழைப்பாணை வந்தது என்று சொன்னால் சரிதான். அந்த சாட்சி சம்மனில் சார்பதிவாளரின் உத்தரவு பெற்ற நபர்தான் வரவேண்டும் என்று சாட்சியம் அளிக்க வரவேண்டுமென்று சொல்லப்படவில்லை, சார்பதிவாளரே நேரடியாக வரவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்படியிருக்கும் போது 08.09.2021 ம் தேதி சார்பதிவாளர் வராமல் நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அதிகார கடிதம் சார்பதிவாளர் எழுதிக்கொடுத்துள்ளாரா என்று கேட்டால் இல்லை. சார்பதிவாளரின் அனுமதி கடிதம் இல்லாமல் சாட்சியம் அளிக்க வந்தால் நான் அந்த அலுவலகத்தில் தான் பணிபுகிறேன் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்தில் பராமரித்து வரும் வருகை பதிவேடு உள்ளது. அதில் நான் கையெழுத்து போட்டுள்ளேன். அதை தேவைப்பட்டால் நகல் எடுத்து தாக்கல் செய்கிறேன். 08.09.2021 ம் தேதி சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து வந்த சம்மனை இன்று கொண்டுவந்துள்ளேனா என்று கேட்டால்

கொண்டுவரவில்லை. 08.09.2021ம் தேதி கொண்டுவந்தேன். 08.09.2021ம் தேதி நீதிமன்றத்திற்கு சார்பதிவாளர் தான் சாட்சியம் அளிக்க வந்திருக்க வேண்டும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் அவரது அதிகார கடிதம் இல்லாமல் நான் சாட்சியம் அளிக்க வந்திருப்பது என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது இல்லை என்று சொன்னால் சரியல்ல. 20.09.2021ம் தேதி சாட்சியம் அளிக்கச்சொல்லி எனக்கு வாதி தரப்பில் என் பெயர் போட்டு சம்மன் வந்துள்ளது என்று சொன்னால் சரிதான். எனக்கு வந்த சாட்சி சம்மனில் என்ன என்ன ஆவணங்க 20.09.2021

அசல் வழக்கு எண்: 557/2013

பி.வா.சா.3 சாட்சி சேகர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

ஆரம்பித்த நேரம்– 12.32 P.M.ள் கொண்டுவரச்சொல்லி சொல்லப்பட்டுள்ளது என்று கேட்டால் 1721/2009, 2278/2009 ஆகிய அசல் பதிவு ரெஜிஸ்டர், பதிவு செய்யப்பட்டு, கையொப்பம் செய்யப்பட்ட ஆவண கோப்பு கொண்டுவரச் சொல்லப்பட்டுள்ளது. நான் மேற்கண்ட 1721/2009, 2278/2009 ஆகிய சார்பதிவாளர் அலுவலக எண்ணிற்கான பதிவு பத்திரத்திரங்களின் உண்மை நகல்களை மட்டும் கொண்டுவந்துள்ளேன். சம்மன் சொல்லப்பட்ட ஆவணங்களை ஏன் கொண்டுவரவில்லை என்று கேட்டால் நான் கொண்டுவராத மேற்கண்ட பதிவேடுகள் 2016ம் ஆண்டிற்கு முந்தைய பதிவேடுகள் என்றும், 2016 ஆண்டிற்கு முந்தைய பதிவேடுகளை online ஏத்துவதற்காக பிசிக்கலாக உள்ள அசல் பதிவு ரெஜிஸ்டர்களை மாவட்ட பதிவாளரின் உத்தரவின் அடிப்படையில் அழிக்கும் நோக்கத்தில் அழித்தல் கோப்புடன் சேர்த்துள்ளோம். மாவட்ட பதிவாளர் உத்தரவினை அலுவலகத்திலிருந்து பெற்று நான் உண்மை நகலாக சமர்ப்பிக்கலாம். மேற்கண்ட ரெஜிஸ்டர்களை மாவட்ட பதிவாளர் உத்தரவு படி அழித்துவிட்டோமா இல்லையா என்று கேட்டால் நான் கடந்த மூன்று மாதங்களாக தான் இந்த அலுவலகத்தில் பகராண்மை அடிப்படையில் வேலை

பார்த்து வருகிறேன் அதனால் நான் இது சம்மந்தமான எங்கள் அலுவலகத்தில் உள்ள கோப்புகளை சரிபார்த்து தான் சொல்ல முடியும். அடுத்த வாய்தாவிற்கு மாவட்ட பதிவாளர் அழிக்க சொல்லி போட்ட உத்தரவு மற்றும் அந்த ரெஸிஸ்டர் அசல் அல்லது ரெஸிடர் அழிப்பதற்கு முன்பு online பதிவேற்றம் செய்யப்பட்ட விபரத்தை நகல் எடுத்து கொண்டுவர வேண்டும் அதனுடன் ரெஸிஸ்டர் அசல் அழிக்கப்பட்டதற்குரிய ஆவணம் கொண்டுவர முடியுமா என்று கேட்டால் Online பதிவேற்றம் செய்யப்பட்ட விபரங்களை கொண்டுவர இயலாது. ஏனெனில் ஆவணங்கள், வில்லங்க சான்றிதழ்கள் மட்டும் தான் online பதிவேற்றம் செய்வோம். ரெஸிஸ்டர்களை பதிவேற்றம் செய்யும் வழக்கம் இல்லை. மேற்கணட் பதிவேட்டை எத்தனை வாரத்திற்குள் கொண்டுவர முடியும் என்று கேட்டால் 2 (இரண்டு) வாரத்திற்குள் கொண்டுவர முடியும். அவ்வாறு வரும் போது எங்கள் அலுவலகத்தில் முறையாக பராமரிக்கப்பட்டு வரும் கைரேகை மற்றும் கையெழுத்து பதிவேட்டில் (ரெஸிஸ்டர்) உள்ள 1721/2009, 2278/09 ஆகிய ஆவணங்களில் கண்டுள்ள கிரையதாரர்கள் மற்றும் கிரையம் பெறுபவர்களது கைரேகை மற்றும் கையெழுத்துக்கள் அடங்கிய பதிவேட்டின் அசலை கொண்டுவரவேண்டும். அல்லது அழிக்கப்பட்டிருந்தால் அதற்குரிய முறையான அவணம் கொண்டுவரவேண்டும் என்று சொன்னால் சரி அதன்படி செயல்படுகிறேன்.

முடிந்த நேரம் 1.15 P.M.